

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி என்.சி.சி., மாணவர்கள் நல்லூர் டவுன் பஞ்., சிறுவர் பூங்காவில் தூய்மை பணி மேற்கொண்டனர்.

# மார்த்தாண்டம் கல்லூரி என்.சி.சி., மாணவர்களின் தூய்மை பணி

மார்த்தாண்டம், மார்ச் 31-

நாகர்கோவிலில் உள்ள தமிழ்நாடு என்.சி.சி., பட்டாலியன் சார்பில் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் சமூகப்பணி நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி என்.சி.சி., மாணவர்கள் நல்லூர் டவுன் பஞ்., சிறுவர் பூங்கா மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் தூய்மை பணி மேற்கொண்டனர்.

முதல்வர் டாக்டர் பால்ராஜ் தலைமை வகித்தார். தாளாளர் ஜெயச்சந்திரன் துவக்கி வைத்தார். நாகர்கோவில் பட்டாலியன் நிர்வாக அதிகாரி அன்சார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

கல்லூரி என்.சி.சி., அதிகாரி கேப்டன் பாபிட் வெல்வி மேற்பார்வையில் சுமார் 50க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தூய்மை பணி மேற்கொண்டனர்.

கல்லூரி என்.சி.சி., அதிகாரி அஜிந்திரநாத் மற்றும் டவுன் பஞ்., அலுவலர்கள் கலந்து கொண்டனர்.